Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 75/2020**

வழக்கு சாட்சி எண். PW2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாமிக்கண்ணு | கிராமம் | : | போடிநாயக்கன்பட்டி |
| கணவர் பெயர் | : | நச்சி | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 60 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1முதல் 3 வரை ஆஜர். எதிரிகள்4, 5 ஆஜர் இல்லை. எதிரிகள்4, 5 சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06**th** Day of **August 2026.**

**முதல் விசாரணை**

நான் போடிநாயக்கன்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன்.

சுமார் 8 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு 9 மணியளவில் போடிநாயக்கன்பட்டியில் தேவேந்திரனுக்கும் ஜெமினி வீட்டாருக்கும் இடையே சண்டை ஏற்பட்டது. அதை நான் விலக்கிவிட்டேன். அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. அதற்கு முன்பு என்ன நடந்தது என்றும் எனக்கு தெரியாது. பின்பு ஒருநாள் மொரப்பூர் காவல் நிலைய போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். பார்வை மகசரில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது

கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகசர் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(மேற்படி சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக அனுமதிக்கக்கோரி அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரிகளும் புகார்தாரரும் எங்களுடைய ஊர்காரர்கள் என்றால் சரிதான். கடந்த 20.02.2020ம் தேதி இரவு 9.30 மணியளவில் தேவேந்திரன் குடும்பத்திற்கும் மகேந்திரன் குடும்பத்திற்கும் ஏற்பட்ட சண்டைபோடும் சத்தம்கேட்டு நான் சம்பவயிடம் சென்று எதிரிகளையும் புகார்தாரரையும் விலக்கிவிட்டேன் என்றும், தேவேந்திரன், மகேந்திரன், ராஜி ஆகியோர்கள் என்னைக்கு இருந்தாலும் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று அசா1ஐ மிரட்டினார்கள் என்றும், அடிப்பட்ட நபரை அவரது மனைவி அரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், இது தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது மாற்றி சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**

Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 75/2020**

வழக்கு சாட்சி எண். PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மகேந்திரன் | கிராமம் | : | போடிநாயக்கன்பட்டி |
| கணவர் பெயர் | : | வேடியப்பன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 49 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரிகள் 1முதல் 3 வரை ஆஜர். எதிரிகள்4, 5 ஆஜர் இல்லை. எதிரிகள்4, 5 சார்பில் பா.நி.சு.சா. பிரிவு - 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06**th** Day of **August 2026.**

**முதல் விசாரணை**

நான் போடிநாயக்கன்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன்.

கடந்த 20.02.2020ம் தேதி இரவு சுமார் 9 மணியளவில் போடிநாயக்கன்பட்டி ஊரில் தேவேந்திரன் என்பவர் குடிபோதையில் வந்து எனது அண்ணன் ஜெமினியை அசிங்கமான வார்த்தைகளில் திட்டிக்கொண்டிருப்பதாக எனது அண்ணன் ஜெமினி போன் மூலம் தகவல் சொன்னார். அதன் பேரில் நான் சம்பவயிடத்திற்கு சென்று கேட்டபோது தேவடியாபையா என்று கெட்டவார்த்தையால் ஜெமினியை திட்டினார். அப்போது தேவேந்திரனும் ஜெமினியும் சண்டை போட்டுக்கொண்டார்கள். தேவேந்திரன் என்பவர் ஜெமினியை அடித்தார். நான் சென்று கேட்டபோது

என்னையும் தேவேந்திரன் என்பவர் வலதுகை மூட்டின் பின்புறம் கட்டையால் அடித்து இரத்தகாயம் ஏற்பட்டது. அதன் பின்பு நான் அரூர் அரசு மருததுவமனைக்கு சிகிச்சைக்கு சென்று சேர்ந்தேன். இது சம்மந்தமாக நான் மொரப்பூர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னை போலீசார் விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

ஜெமினி என்னுடைய உடன் பிறந்த சகோதரரா என்றால் இல்லை. தேவேந்திரன் வீட்டிற்கும் ஜெமினி வீட்டிற்கும் சுமார் 300 அடி தூரம் இருக்கும் ஜெமினி வீட்டில் இருந்து கூப்பிட்டால் எங்கள் வீட்டிற்கு கேட்குமா என்றால் கேட்காது. ஜெமினி போன் செய்து 10 நிமிடத்தில் நான் வந்துவிட்டேன். அந்த 10 நிமிடத்தில் தேவேந்திரனுக்கும் ஜெமினி என்பவருக்கும் எந்த கைகலப்பும் ஏற்படவில்லை என்றால் சரிதான். மொரப்பூர் காவல் நிலையத்தில் மறுநாள் காலை புகார் அளித்தேன். தேவேந்திரன் புகார் அளித்த பின்புதான் நான் புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் முதலில் புகார் அளித்தேன். தேவேந்திரன் மதுபோதையில் இருந்தார் என்று எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நடந்ததை சொன்னேன். நான் சுயவிருப்பத்தின்பேரில் அதனை சொல்கின்றேன் என்றால் சரியல்ல. தேவேந்திரன் ஜெமினியிடம் எந்த ஒரு கைகலப்பும் ஈடுபடவில்லை அவர் அமைதியாக இருந்தார் என்றால் சரியல்ல. தேவேந்திரன் என்னை வலது கையில் அடிக்கவில்லை என்றால் சரியல்ல. தேவேந்திரன் கட்டையால் அடித்தாக சொல்கிறேன் என்றும், அவர் வீட்டில் இருந்து வரும்போதே கட்டையை கொண்டுவாந்தார் என்றால் சரியல்ல. 2ம் எதிரி

ராஜி என்பவரை நாங்கள் அடித்து அவருடைய நெஞ்சு எலும்பு நொறுங்கும்வரை தாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. தேவேந்திரன் என்னை கட்டையால் தாக்கியவுடன் நான் வந்துவிட்டேன். அதன் பின்பு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான்தான் எதிரிகளை தாக்கி அவர்களுக்கு எலும்பு முறிவு ஏற்படுத்தினேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் மீது அளித்த புகாரில் இருந்து தப்பிப்பதற்காக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**